இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 25.06.2026

# கர்நாடகத்தின் பிடிவாதமும்! நடுவர் மன்ற கடிவாளமும்!

கர்நாடக மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசு, காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டியே ஆவோம் என்ற முடிவோடு செயல்பட்டு வருகிறது. **‘கர்நாடக அரசு மேகதாது அணையைக் கட்டக் கூடாது’** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் தனித் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். இதனை தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சி களும் ஒருமனதாக நிறைவேற்றி உள்ளன.

இது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்தார்கள். **“கடந்த 4.3.2026 அன்று அப்போது முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி தமிழ்நாடு நீர்வளத்துறை அரசு செயலாளர், மத்திய ஜல்சக்தித் துறை செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். ‘கர்நாடகாவில் மேகதாது அணை கட்டும் பிரச்சினை புதிய சிக்கல் என்பதால், நதிநீர் தாவா சட்டம் 1956 இன் படி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்’ என்று கோரி இருந் தார். ஆகவே இந்த அரசு இப்போது கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தில் அந்தக் கருத்தையும் சேர்க்க வேண்டும். புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கருத்தையும் இந்த தீர்மானத்தில் சேர்க்க வேண்டும்”** என்று கேட்டுக் கொண்டார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி.

**“எதிர்க்கட்சித் தலைவரால் அளிக்கப்பட்ட கருத்தை தீர்மானத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்”** என்று முதலமைச்சர் விஜய் அவர்களும் சொல்ல அதுவும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டது. **‘முதலமைச்சரின் தீர்மானம், திருத்தியவாறு பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது’** என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். குரல் வாக்கெடுப்பு மூலமாக தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. அனைத்துக் கட்சிகளும் இதனை ஏற்றுக் கொண்டார்கள்.

கர்நாடக அரசு மேகதாது அணையைக் கட்டினால் தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக எதிர்க்கும் என்பதை அனைவரும் ஒற்றுமையாகக் காட்டி னார்கள்.

மேகதாது அணை கட்டுவோம் என கர்நாடக அரசு முனைப்புக் காட்டும் போதெல்லாம் தமிழ்நாடு அதனை கடுமையாக எதிர்த்தே வந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 5, 2015 ஆம் ஆண்டு மார்ச் 27, 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 6, 2022 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆகிய நாட்களில் தமிழ் நாடு சட்டமன்றத்தில் மேகதாது அணை கட்டுவதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 19 ஆம் தேதியன்று நிறை வேற்றியது ஐந்தாவது முறையாகும். தமிழ்நாடு ஒற்றுமை உணர்வோடு மேகதாது அணையை எதிர்க்கிறது என்பதை மெய்ப்பித்து வந்துள்ளோம். அதற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் அரசியல் கட்சிகள் நடந்து கொள்ளக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவரால் திருத்தம் கொடுக்கப்பட்டு, முதலமைச்சரால் ஏற்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளாலும் ஆதரித்து வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து விமர்சிப்பது தமிழ்நாட்டின் ஒற்றுமை உணர்வைச் சிதைப்பது ஆகும். இந்த விவகாரத்தில் தமிழ் நாடு ஒற்றுமையாக இல்லை என்று கர்நாடக அரசும், ஒன்றிய அரசும் நினைக்க இது வழிவகை செய்யும்.

*** காவிரி நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், காவிரி நதியின் குறுக்கே மேகதாது வில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.**

*** கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எவ்வித அனுமதியும் ஒன்றிய அரசு அளிக்கக் கூடாது.**

*** கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.**

*** கர்நாடகாவில் மேகதாது அணை கட்டும் பிரச்சினை புதிய சிக்கல் என்பதால், நதிநீர் தாவா சட்டம் 1956 இன் படி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்.**

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தெளிவாக இருக்கிறது. இதனை விமர்சிப்பது கர்நாடக அரசுக்கே சாதகமாக முடியும்.

காவிரி உரிமை பற்றியோ, காவிரி நடுவர் மன்றம் நமக்கு அளித்துள்ள நீர் பகிர்வு குறித்தோ புதிய நடுவர் மன்றம் பரிசீலிக்கப் போவது இல்லை. மேகதாது அணையைப் பற்றியது மட்டுமே இது. தண்ணீர் வழங்குவது குறித்த பிரச்சினை அல்ல இது. கர்நாடக அரசு இன்று அவசரம் காட்டி வருகிறதே, அதனை உடனடியாக நாம் தடுத்தாக வேண்டும்.

காவிரி நடுவர் நீதி மன்றம் மூலமாகத்தான் நமக்கான உரிமையை கடந்த காலத்தில் பெற்றோம். 1991 ஜூன், 25இல் காவிரி நடுவர் மன்ற மானது கர்நாடகா ஆண்டுதோறும் தமிழ்நாட்டுக்கு, 205 டி.எம்.சி., நீர் வழங்க வேண்டும் என இடைக்கால தீர்ப்பு கூறியது. 2007 பிப்ரவரி 5 இல் இறுதி தீர்ப்பு வழங்கியது. எனவே நடுவர் மன்றம் என்பது மிகமிக அவசியமானது ஆகும்.

2015 ஆம் ஆண்டு மேகதாது அணை கட்டுவதற்கான திட்ட அறிக்கையை தாக்கல் செய்ய கர்நாடக அரசு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. 2018 ஆண்டு மேகதாதுவில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு தாக்கல் செய்த திட்ட வரைவு அறிக்கைக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்தது. அப்போது தமிழ்நாடு கடுமையாக எதிர்த்தது. தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகா அரசு மேகதாது அணை கட்ட முடியாது என காவிரி மேலாண்மை வாரியம் விளக்கம் அளித்தது. எனவே காவிரி மேலாண்மை வாரியத்தின் செயல்பாடும் மிகமிக அவசியமானதாக அமைந்துள்ளது.

**ஒன்றிய அரசானது இரண்டு மாநிலத்தையும் பகைத்துக் கொள்ளாத முடிவை எடுக்க வேண்டும் என்று நினைக்கும். அந்த நேரத்தில் நடுவர் மன்றம் போன்ற அமைப்புகள்தான் நடுநிலையான தீர்ப்பை வழங்க முடியும். எனவே, நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற முடிவை விமர்சிக்கும் கட்சிகள் இதனைப் புரிந்து கொண்டு, எதிர் வாதங்கள் வைப்பதை தவிர்க்கலாம்.**

---

### திருவல்லிக்கேணி கூட்டுறவு சங்கத்தில்

# ஒப்பந்த நியமனத்தில் முறைகேடு!

சென்னை, ஜூன் 25 - திருவல்லிக்கேணி கூட்டுறவு நகர சங்கத்தில், கூட்டுறவு துறை விதி களை மீறி தனியார் நிறு வனம் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் நியமிக் கப்படுவதாக, புகார் எழுந் துள்ளது.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் சங்கங் கள், பல்பொருள் அங் காடி, பெட்ரோல் பங்க், காய்கறி கடை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை நடத்துகின்றன. இவற்றில், ஒப்பந்த அடிப் படையில் ஊழியர்கள் பணியில் உள்ளனர்.

ஒப்பந்தம் எடுக்கும் தனியார் நிறுவனங்கள், குறைந்த எண்ணிக்கை யில் பணியாளர்களை நியமித்தல் உள்ளிட்ட பல் வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு கள் எழுந்தன.

இதுகுறித்து, கூட்டுறவு பணியாளர்கள் கூறிய தாவது:

தனியார் நிறுவனங் களிடம் இருந்து, வேலை யாட்களை நியமனம் செய்வதில் பல நடை முறை சிக்கல்கள் உள் ளன. எனவே, பதிவு செய் யப்பட்ட கூட்டுறவு நிறு வனங்கள் வாயிலாகவே ஒப்பந்த பணியாளர் களை நியமிக்கும்படி, 2020ல் கூட்டுறவுத் துறை புகார் உத்தரவிட் டது. அதன்படி, பல சங் கங்களில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.

திருவல்லிக்கேணி சங் கத்தில் மட்டும், 130 - 150 பணியாளர்கள் நிய மிக்கப் படுவர். அவர்க ளுக்கு சம்பளத்தை சங் கமே தருகிறது. தற்போது, தனியார் நிறுவனத்துக்கு பணி வழங்கப்பட் டுள்ளது.

இதற்கு, ‘ஆதாயமே’ காரணம் என்று சொல்லப்படுகிறது. இது தொடர்பாக உயரதிகாரி கள் விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; முதல்வர் விஜய்யின் பிறந்த நாளையொட்டி, அவரது தாய் தந்தையர் சென்னை தலைமைச் செயலகத்திற்குச் சென்று பூங்கொத்து கொடுத்து வாழ்த்து கூறியிருக்கிறார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; பிறந்த நாளில் மகன், பெற்றோரை நாடிச் சென்று வாழ்த்து பெறுவது தான் நாம் பின்பற்றிவரும் வழக்கம் - மரபு.**

**ஆனால் விஜய்யின் பெற்றோர், மகனைத் தேடிச் சென்று வாழ்த்து கூறியிருப்பதில் ஏதோ இடிக்கிறதே!**

**வழக்கம் - மரபுகளைப் புரட்டிப் போடுவது தான் ‘மாற்றம்’ என்று விஜய் நினைக்கிறாரோ, என்னவோ ?**

---

### எதிர்க்கட்சி மீது — முதல்வர்

# எந்தவித ஆதாரமுமில்லாமல் குற்றம் சாட்டுவதா?

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளிநடப்பு!

**சென்னை, ஜூன் 25- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் ஆளுநர் உரை மீது முதல்வர் ஜோசப் விஜய் பதிலு ரையாற்றும் போது எதிர்க்கட்சி கள் மீது அவதூறு பரப்பும் வகையில் பேசினார். அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து பதிலளிக்க வாய்ப்புக் கேட்டனர். அதற்கு சபாநாயகர் அனுமதிக்கவில்லை. அதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச அனுமதிக்கக் கோரி எழுந்து நின்று முழக்க மிட்டனர். பின்னர் எதிர்க்கட்சி யினர் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.**

அப்போது சபாநாயகர் அவர்கள், முதல்வர் விஜய் பதிலுரை யாற்றி முடித்தபிறகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு பேச வாய்ப்பு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.



அப்போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டுப் பேசும் போது, பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் பேர வையில் உரையாற்றும்போது அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். அதற்கு நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள். அது போல இன்றைக்கு முதலமைச் சர் அவர்கள் பேசும்போது, சில தவறான வார்த்தைகள் பேசு கிறார். Party Fund என்று சொல் கிறார். எந்த Party Fund என்று கூட சொல்லவில்லை என்று அமைச்சர் சொல்கிறார். தைரிய மிருந்தால் சொல்லுங்கள். எதை யும் ஆதாரத்துடன் சொல்லுங் கள். நாங்கள் அதைச் சந்திக்க தயாராக உள்ளோம்.

அதுபோல், நேற்று, நான் பேசி முடித்தவுடன், பேரவைத் தலைவர் அவர்கள் ‘அவை முடிந்தது’ என்று கூறினார். அத னால் நாங்கள் எல்லாம் வீட்டிற் குச் சென்று விட்டோம். வீட்டிற்கு சென்றதும் டி.வி.யைப் போட்டு பார்த்தால் இன்னொரு அமைச் சர் இன்னும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதெல்லாம் என்ன பதில், என்ன மரபு. அவர் என்னவெல்லாம்கூட பேசிக் கொண்டிருப்பாரா, அதை நாங் கள் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது நாங்களும் அமைதி யாகத்தான் கேட்டுக் கொண்டி ருந்தோம்.

ஆனால் சில அவதூறு கருத்துகளை அவர் பேசும்போது, அதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஆதாரத்துடன் சொல்ல வேண்டும். குற்றச்சாட்டு சொல் லும்போது ஆதாரத்துடன் சொன் னால் அது குறித்து உண் மையை விளக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசும்போது மைக் துண்டிக்கப்பட்டது. மீண் டும் முதல்வர் ஜோசப் விஜய் அதையே பேசியதால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அவையி லிருந்து வெளிநடப்பு செய்தனர்.

---

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்தான்

# திருவரங்கம் தொகுதி முழு வளர்ச்சி பெற்றது!

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

*திருச்சி, ஜூன் 25- திருரங்கம் தொகுதி வளர்ச்சி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையி லான ஆட்சியில் மட்டுமே முழுமை பெற்றது என கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் முன் னாள் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில் குறிப்பிட்டார்.*

*முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருச்சி திருவானைக் கோவில் பகுதியில் வட்டச் செயலாளர் கனகராஜ் தலை மையில் நடைபெற்றது.*

*இந்த பொதுக்கூட்டத் தில் கழக முதன்மை செய லாளரும், தமிழ்நாடு சட்ட மன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான கே.என். நேரு, மற்றும் திராவிடர் இயக்க தமிழர் பேரவை*



*தலைவர் சுப.வீரபாண்டி யன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னர்.*

*இந்த பொதுக்கூட்டத் தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்,*

*கலைஞரின் புகழையும் அவர் செய்த சாதனைகளை யும் மக்களிடம் தொடர்ந்து கொண்டு சேர்த்தால் மட் டுமே திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் வளரும். திருவரங்கம் தொகுதியைப் பொறுத்தவரை பல்வேறு கட்சிகள் மற்றும் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பல பணி கள் நடந்திருந்தாலும், மு.க. ஸ்டாலின் மற்றும் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலங் களில் மட்டுமே முழுமை யான மற்றும் உண்மை யான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழக மக்களுக்கு உண்மை யான உழைப்பாளர்களாக வும், பாடுபடுபவர்களாக வும் தி.மு.க. தலைவர்கள் மட்டுமே இருந்து வருகின் றனர்.*

*திருவரங்கம் தொகுதி யில் கடந்த தேர்தல்களில் சில ஏற்ற இறக்கங்கள் இருந் திருந்தாலும், வரும் தேர்தல் களில் மக்களின் பேராதர வோடு மீண்டும் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெறும்.*

*தி.மு.க. மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கவும், மு.க. ஸ்டாலின் அவர்களின் கரங் களை வலுப்படுத்தவும் அனைவரும் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.*

*இதனைத் தொடர்ந்து சுப.வீரபாண்டியன் பேசு கையில்...*

*50 ஆண்டுகளுக்கு முன்பே டெல்லியால் கொடுக்கப் பட்ட மிகக் கடுமையான நெருக்கடி நிலையை தாண்டி வந்த பாரம்பரியம் இந்த கழகத்திற்கு உண்டு, ஆட்சியில் இல்லாத போதும் மக்களுக்கு உதவும் ஒரே கட்சி தி.மு.க. தான். தேர் தல் வாக்குறுதிகளாக நிறை வேற்ற முடியாத பல பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றியவர்க ளுக்கே தற்போதைய மக் கள் ஆதரவு கிடைத்துள்ளது. 2006ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், விவ சாயிகளின் 7000 கோடி ரூபாய் பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்து முதல் கையெழுத்திட்டார். மக் கள் நலனில் அக்கறை கொண்ட அரசை மக்கள் சில நேரங்களில் மறந்துவிடு கிறார்கள்.*

*கலைஞர் அவர்கள் தனது வாழ்நாளில் பார்க் காத வெற்றிகளும் இல்லை, தோல்விகளும் இல்லை. எனவே தற்காலிகத் தோல் விகளைக் கண்டு தி.மு.க. தொண்டர்கள் சோர்ந்து போகாமல், முன்னைவிட வேகமாக எழுந்து நிற்பார் கள் என பேசினார்.*

*இந்த பொதுக்கூட்டத் திற்கு முன்னதாக ஏழை, எளிய மக்களுக்கு தையல் மெஷின், ஆட்டோ, சைக் கிள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.*

*இந்த பொதுக் கூட்டத் தில் மத்திய மாவட்டச் செயலாளர்கள் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பழ னியாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*